**கவனிக்க.**– 2006.05.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1446 - 2006 මැයි 19 වැනි සිකුරාදා - 2006.05.19

1446 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 438 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 432 | ஏல விற்பனைகள் | 438 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 433 | நானாவித அறிவித்தல்கள் | – |


வியாழக்கிழமை **வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 26 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 11 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - மல்லாகம்

சான்றுப்பொருட்கள் ஏலவிற்பனை

1. பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் 03.06.2006 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏலவிற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. பதிவாளரின் அனுமதி பெற்று ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களை பொதுமக்கள் பார்வையிடலாம்.

4. நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது எற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏலவிற்பனையில் இருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்றும் கொண்டுள்ளது.

5. ஏலவிற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டுமென அறியத்தரப்படுகின்றது.

ச. இளங்கோவன்,
மாவட்ட நீதிபதி,

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.
2006.04.19

பிரதி : (1) செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, கொழும்பு - 12
(2) செயலாளர், நீதியமைச்சு, கொழும்பு 12.

**அட்டவணை**

| தொடர் இல. | வழக்கு இல. | ரகம் | விபரம் | பதிவு இலக்கம் | தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | ஏஆர்315/05 | து. ச. வண்டி | லுமாலா | 55914340 | 07.12.2005 |
| 2. | ஏஆர்316/05 | து. ச. வண்டி | லுமாலா | 55620375 | 07.12.2005 |
| 3. | ஏஆர்135/05 | து. ச. வண்டி | லுமாலா | கே206597 | 17.05.2005 |
| 4. | ஏஆர்135/05 | து. ச. வண்டி | லுமாலா | 55634589 | 17.05.2005 |
| 5. | ஏஆர்135/05 | து. ச. வண்டி | லுமாலா | 57138232 | 17.05.2005 |
| 6. | ஏஆர்220/05 | து. ச. வண்டி | லுமாலா | ஏ67001 | 31.05.2005 |
| 7. | ஏஆர்220/05 | து. ச. வண்டி | லுமாலா | என்85004 | 31.05.2005 |
| 8. | ஏஆர்220/05 | து. ச. வண்டி | லுமாலா | எச்48581 | 31.05.2005 |
| 9. | ஏஆர்220/05 | து. ச. வண்டி | லுமாலா | 710886 | 31.05.2005 |
| 10. | ஏஆர்36/05 | து. ச. வண்டி | றலி | இபி2480 | 19.01.2005 |
| 11. | ஏஆர்36/05 | து. ச. வண்டி | லுமாலா | 13337597 | 19.01.2005 |
| 12. | ஏஆர்20/05 | து. ச. வண்டி | லுமாலா | 730120 | 13.01.2005 |
| 13. | ஏஆர்20/05 | து. ச. வண்டி | லுமாலா | 581194 | 13.01.2005 |
| 14. | ஏஆர்18/05 | து. ச. வண்டி | லுமாலா | ஜே1923081 | 11.01.2005 |
| 15. | ஏஆர்156/05 | து. ச. வண்டி | லுமாலா | ஜே2199814 | 19.04.2005 |
| 16. | ஏஆர்164/05 | து. ச. வண்டி | றலி | சி. சி13938 | 25.04.2005 |
| 17. | ஏஆர்83/05 | து. ச. வண்டி | லுமாலா | 51151561 | 04.03.2005 |
| 18. | பி. 391/03 | து. ச. வண்டி | லுமாலா | 27155572 | 09.03.2006 |
| 19. | ஏஆர்48/05 | து. ச. வண்டி | லுமாலா | 55623110 | 25.01.2005 |

| தொடர் இல. | வழக்கு இல. | ரகம் | விபரம் | பதிவு இலக்கம் | தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 20. | .ஏஆர்48/05 | து. ச. வண்டி | லுமாலா | சி11936 | 25.01.2005 |
| 21. | ஏஆர்92/05 | து. ச. வண்டி | கீரோ | ஜி168398 | 09.03.2005 |
| 22. | ஏஆர்390/04 | து. ச. வண்டி | லுமாலா | 55773538 | 17.12.2004 |
| 23. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 55712 | 22.03.2006 |
| 24. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 56சி69913 | 22.03.2006 |
| 25. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 56026288 | 22.03.2006 |
| 26. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 55691063 | 22.03.2006 |
| 27. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | எஸ்இசி86253 | 22.03.2006 |
| 28. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 57140690 | 22.03.2006 |
| 29. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 56சி77191 | 22.03.2006 |
| 30. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 780 | 22.03.2006 |
| 31. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | எஸ்இசி5586 | 22.03.2006 |
| 32. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 55779412 | 22.03.2006 |
| 33. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 57145248 | 22.03.2006 |
| 34. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 57181544 | 22.03.2006 |
| 35. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 5586331 | 22.03.2006 |
| 36. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 57171820 | 22.03.2006 |
| 37. | 9462 (187/05) (188/05) | து. ச. வண்டி | லுமாலா | 01ஏ2940 | 22.03.2006 |
| 38. | 7297 | து. ச. வண்டி | லுமாலா | 37205153 | 04.03.2005 |

5-192

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2006/2007

(2006 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)

2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலப்பகுதிக்கான இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனைகளும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமை படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்ட உறையிலிட்டு, இடப்பக்கத்தின் மேன்மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் பின்வருமாறு "..................... இலக்கமுள்ள ............... கள்ளுத் தவறணைக்குரிய கேள்வி" எனக் குறிப்பிட்டு 2006.06.05 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கல்பிட்டி" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்குவிடும் நிபந்தனைகளுக்கு அமைய இடுதல் வேண்டும்.

5. 2006.06.05 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் கேள்விப்பத்திரக் கோரிக்கைகாரர்கள் அனைவரும் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும். மறுவிற்பனை 2006.06.19 ஆந் திகதி காலை 10.00 மணகிகு இடம்பெறும்.

6. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

எச். எம். எஸ். பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2006.04.28.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப்பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2006.06.05 மு. ப. 10..00 மணி | 1,000 |
| 2. | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2006.06.05 மு. ப. 10..00 மணி | 1,000 |

5-195

---

**வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2006/2007**

2006 ஆம் வருடம் யூலை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2007 ஆம் வருடம் யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புத் தொகைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதிற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையின் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்படும் உறையின் இடது பக்கத்தில் “ ...................... இலக்கமுள்ள ....................... கள்ளுத் தவறணைக்கான விண்ணப்பப்பத்திரம்” என கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2006, மே மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் வென்னப்புவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இடுத்தல் வேண்டும்.

5. 2006.05.24 ஆந் திகதி மு.ப. 10. 00 மணிக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத்தவறணைகள் திரும்ப விற்பனை 2006.06.12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரிகையின்படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சீ. பெர்னாந்து,
பிரதேச செயலாளர்.
வென்னப்புவை.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திரம் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | தம்பராவில் | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 500 |
| 2. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 250 |
| 3. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வைக்கால் | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 1,000 |
| 4. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வொரலஸ்ஸ | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 500 |
| 5. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | தும்மளதெனிய | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 1,000 |
| 6. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | லுனுவில | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 500 |
| 7. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வென்னப்புவ | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 2,000 |
| 8. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | ஊள்கிடியாவ | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 500 |
| 9. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | நய்னமடம | 2006.05.24 காலை 10.00 மணிக்கு | 1,000 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | தவறணை மூடப்படும் நேரம் |
|---|---|
| மு. ப. 11.00 | பி. ப. 2. 00 |
| பி. ப. 5.00 | இரவு 8.00 |

5-210

---

எனது இல. : 8/1/4/7/5.

**ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2006/2007**

(2006.07.01 முதல் 2007.06.30 ஆந் திகதி வரை)

2006 ஆம் வருடம் யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2007 ஆம் வருடம் யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையின் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

**நிபந்தனைகள் :**

01. (அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களினதும் பொது நிபந்தனைக்கு அமைவாகவும்,

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைவாகவும்,

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைய ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பத் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழ்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பெயரிடப்பட்ட, உறையில் இட்டு இடது பக்கத்தில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "................................. இலக்கமுள்ள ................................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்பட வேண்டும். 2006.05.22 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதையிடுதல் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைய இடல் வேண்டும்.

5. 2006, மே 22 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திரக் கோரிக்கையாளர்கள் இச்செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆந் திகதி முற்பகல் 10.00 மணியளவில் மறுவிற்பனைக்காக விடப்படும். அன்றைய தினம் ஏல முன் வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாகும்.

6. இது தொடர்பாக மேலதிக விபரங்களை ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஆர். எம். மலிக்,
பிரதேச செயலாளர்,
ஆராச்சிக்கட்டுவ.

பிரதேச செயலகம்,
ஆராய்ச்சிக்கட்டுவ,
2006.05.03.

**அட்டவணை**

| பிரதேசம் | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் விற்கும் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப்பத்திர பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஆனைவிழுந்தான் பற்று | கருக்குப்பனை | 10 | 2006, மே மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |
| ஆனைவிழுந்தான் பற்று | ஆராய்ச்சிக்கட்டுவ | 11 | 2006, மே மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |
| ஆனைவிழுந்தான் பற்று | பத்துலுஓய | 12 | 2006, மே மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |

5-246

---

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை-2006/2007

2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன், கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(3) கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு, அதன் இடப்பக்கத்தில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "............ இலக்கமுள்ள ............... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2006.05.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(4) கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செய்யப்படல் வேண்டும்.

(5) 2006.05.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

(6) மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2006.06.06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

(7) இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 032-2223205).

எம். ஸி. பிரனாந்து,
பதில் பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2006.05.03

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட். இலக்கம் 2 | இச்சம்பிடிய | 2006.05.26 மு. ப. 10.00 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட். இலக்கம் 3 | அலுத்வத்தை | 2006.05.26 மு. ப. 10.00 | 1,000 |
| 3. | பிடிகல் கோரளை | ஒலிதலுவ | 2006.05.26 மு. ப. 10.00 | 250 |

5-248

---

**முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2006/2007**

(2006.07.01 ஆந் திகதி முதல் 2007.06.30 ஆந் திகதிவரை)

2006 ஆம் வருடம் யூலை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2007 ஆம் வருடம் யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையின் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. முந்தல் பிரதேசச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புக் கொள்கைப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதலும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பூர்த்தசெய்யப்பட்டு உறையில் இட்டு அதன் இடது பக்கத்தில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "..........................இலக்கமுள்ள .................................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2006.05.26 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2006.05.26 ஆந் திகதி காலை 10. 00 மணிக்கு கேள்வீபப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்குச் சமுகமளித்திருத்தல் வேண்டும்

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஆர். எம். மலீக்,
பிரதேச செயலாளர்.
முந்தல்.

**உப அட்டவணை**

| இல. | பி. செ. பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுறதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 1 | முந்தல் | முந்தல் | காலை 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | மு. ப. 10.00 மணி<br>2006.05.26 | 1,000 |
| 2 | முந்தல் | மதுரங்குளி | காலை 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | மு. ப. 10.00 மணி<br>2006.05.26 | 1,000 |
| 3 | முந்தல் | முக்குத் தொடுவாவ | காலை 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | மு. ப. 10.00 மணி<br>2006.05.26 | 1,000 |
| 4 | முந்தல் | உடப்பு | காலை 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | மு. ப. 10.00 மணி<br>2006.05.26 | 1,000 |

எம். ஆர். எம். மலீக்,
பிரதேச செயலாளர்.
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2006.05.03

5-258

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்னித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

யு. ஏ. ஈ. அபுதாபி த. பெ. இல. 3541, ஹொலிடே இன், குரோனி பிளாசாவைச் சேர்ந்த டொரீன் என்டியோனெட் ஜோன்ங் ஆகிய நான், பன்னிப்பிட்டிய, கொட்டாவ, ருக்மல்கம வீடமைப்புத் திட்டம், 1ஏ, 253 ஐச் சேர்ந்த மைக்கல் அலோசியஸ் விக்டர் டி ஜோன்ங் என்பவருக்கு வழங்கப்பட்ட, 2005 ஒகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட அட்டோர்னித் தத்துவத்தை உடனடியாக இரத்துச் செய்துள்ளேன் எனவும், செல்லுபடியாததாக்கியுள்ளேன் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

டொரீன் என்டியோனெட் ஜோன்ஸ்.

5-200

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ம் பிரிவு (397ம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

*(களுத்துறை, நாகொட, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ரியோ இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிடெட்டின் பொறுப்புக்களுக்காக ஈடுவைத்த ஆதனங்கள்).*

கடன் தொடர்பு இல.

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2005 ஒற்றோபர் 14 ஆந் திகதி 1415ம் இலக்க வர்த்தமானியிலும் 2005.10.07 ஆந் திகதி தினமின, டெய்லிநியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த எம்/எஸ் ஆர்.எஸ். எம். ஏலத்தின் ஏலதாரர் 2006.06.17 ஆந் திகதி பி.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக் கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம் களுத்துறை மாவட்டம் களுத்துறை தொட்டமுனை வடக்கு களுத்துறை பத்தயில் நாகொடயில் அமைந்த வரிமதிப்பிலக்கம் 18 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு.

செனிவிரத்ன தயாரித்த 1984, பெப்புருவரி 29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3825 இல் விபரித்த துண்டு 'ஏ' என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : பிரதான ரோட்டும் ; கிழக்கில் : தற்சமயம் பட்டினசபை பாதையாகிய 20 அடி அகலத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் ; தெற்கில் : துண்டு 1பீ யும், மேற்கில்: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3825 இன்படி துண்டு 1ஏ 2ம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3825இன்படி இருபத்து நான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.75பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 207/197 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேட்ட முகாமையாளர்,
(அறவிடல் - கிளைகள்)

இலங்கை வங்கி,
அறவிடல் பிரிவு,
3ஆம் தளம், தலைமை அலுவலகம்,
4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

5-304

---

### இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ஆம் அத்தியாயம்)
22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

#### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

*(கடன்பட்டவர் - இல. 113/6, பிரிபன வடக்கு, ஹோமாகம என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சமரசுந்தர ஹெட்டிகே சமன்சிறி).*

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் 2006.01.20 ஆந் திகதிய 1429 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2006.01.12 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலொன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் எம்/எஸ். ரி அன்ட் எச் ஏலதாரர்கள் 2006.07.08 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### ஈட்டு முறியில் குறிப்பிட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பல்லேபற்றுவில் ஹோமாகம உ.அ.அ. பிரிவில் பிட்டிபனையில் (வடக்கு) அமைந்ததும் பாடசாலை ஒழுங்கை தற்சமயம் வரிமதிப்பிலக்கம் 113 (பகுதி) ஐக் கொண்ட கஹட்டகஹலந்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ தயாரித்த 1986, ஒற்றோபர் 27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2734 இல் விபரித்த துண்டு 30 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: துண்டு 20 உம்; கிழக்கில் : துண்டு 31 உம்; தெற்கில்: துண்டு 45 உம்; மேற்கில்: துண்டு 39உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2734 இன்படி பதினெட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜி 1000/17 இல் பதிவுசெய்யப்பட்டது.

பி. எம். பிரேமதாச,
சிரேட்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தறக் கிளை,
நுகேகொடை.

5-306

---

### இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ஆம் அத்தியாயம்)
22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

#### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2005, ஒற்றோபர் 14 ஆந் திகதிய 1415 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.10.07 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த எம்/எஸ் ஆர்.எஸ். எம். ஏலத்தின் ஏலதாரர் 2006.06.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை வடக்கு களுத்துறை பத்தயில் பம்புவலயில் அமைந்த கெகுனகஹவெலதுடுவகலே என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எஸ். சுமனசேகர தயாரித்த 1992, பெப்புருவரி 06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2188 இல் துண்டு பி 2 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் :

மேற்குறிப்பிடப்பட்ட வரைபடம் இல. 2188 இல் விபரித்த துண்டு 1 உம்; கிழக்கில்: வரைபடம் இல.65141 இல் காணப்படும் நெல் வயலும்; தெற்கில்: அரசாங்கத்துக்கு சொந்தமான காணியும்; மேற்கில்: துண்டு 33 மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இன்படி பாதைக்காக ஒதுக்கப்பட்ட துண்டு 36 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இன்படி ஒரு ஏக்கர் இரண்டு றூட் இருபத்திநான்கு பேர்ச்சுகள் (1ஏ. 2றூ. 24பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 174/45 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பம்புவலயில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எஸ். சுமனசேகர தயாரித்த 1992, யூன் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3015 இல் விபரித்த கெகுனகஹவெலதுடுவகலே துண்டு பீ 1 இன் துண்டு 45 (பகுதி) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: வரைபடம் இல. 65133, 65135 மற்றும் 65137இல் காணப்படும் நெல் வயலும் வரைபடத்தில் துண்டுகள் 44, 46 மற்றும் 47உம்; கிழக்கில்: வரைபடம் இல. 65141 இல் காணப்படும் நெல் வயலும் ; தெற்கில்: அதே காணியின் துண்டு பீ2 உம்; மேற்கில்: இவ்வரைபடத்தின் துண்டுகள் 44, 46 மற்றும் 47உம் வரைபடம் இல. 1781ஏ இல் துண்டு 36 உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 3015 இன்படி ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 207/196 இல் பதிவுசெய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட போபுவலயில் அமைந்த கெகுனகஹ வெலதுடுவகலே என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இல் விபரித்த துண்டு 38 (15அடி அகலபாதைக்கு ஒதுக்கப்பட்ட பாதை) அடையாளமிட்ட பிரிக்கப்பட்டிருந்த இந்த காணித்துண்டு வடக்கில் : துண்டு பீ1 உம்; கிழக்கில்: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இல் விபரித்த துண்டுகள் பீ1 மற்றும் பீ2 உம்; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இன்படி துண்டு பீ2, துண்டு 23 மற்றும் துண்டு 24உம்; மேற்கில்: துண்டுகள் 25 தொடக்கம் 33உம் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இன்படி 12 அடி அகலப் பாதை துண்டுகள் 35 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2188 இன்படி ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடையது. இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 198/235 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேட்ட முகாமையாளர்,
(அறவிடல் - கிளைகள்)

இலங்கை வங்கி,
அறவிடல் பிரிவு,
3 ஆம் தளம், தலைமை அலுவலகம்,
4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

5-305

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

(களுத்துறை, நாகொட, கெமுனு மாவத்த, இஷாரா என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கே. டி. குணபாலவின் கடன் பொறுப்புக்களுக்காக ஈடுவைத்த ஆதனம்.)

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2005.10.14 ஆந் திகதிய 1415 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.10.07 ஆந் திகதிய “தினமின”, “டெய்லிநியூஸ்”, “தினகரன்” ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ஆர். எஸ். எம். ஏலதாரர் 2006.06.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தொட்டமுனை வடக்கு களுத்துறையில் களுத்துறை பெத்தயில் நாகொடயில் அமைந்ததும் தடிகொடகுருந்துவத்தயின் துண்டு 2 இன் ஒரு பகுதி என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். தி. எவ். டப். குணரத்ன தயாரித்த 1968, செத்தெம்பர் 28 மற்றும் ஒகத்து 24 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 224 இல் துண்டு 21 என அடையாளமிட்ட காணி வடக்கில்: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் துண்டு 20 உம்; கிழக்கில் ; மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் ஒதுக்கப்பட்ட பாதையொன்றாகிய துண்டு 25 உம்; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் 224 இல் துண்டு 24 உம் ; மேற்கில்: அதே காணியின் துண்டு 1 இன் ஒரு பகுதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இன் படி இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்குள்ள மரங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி செய்தல்களும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 109/45 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை வடக்கு களுத்துறை பெத்தயில் நாகொடையில் அமைந்ததும் தடிகொடகுருந்துவத்தயின் துண்டு 2 இன் பகுதி என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். தி. எவ். டபிள்யு. குணரத்ன தயாரித்த தயாரித்த 1968, செத்தெம்பர் 28 மற்றும் ஒகத்து 24 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 224 இன்படி துண்டு24 என அடையாளமிட்ட காணித்துண்டு : வடக்கில் : வரைபடம்

துண்டு 224 இல் 21 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் ஒதுக்கப்பட்ட பாதைகளின் துண்டு 25 உம்; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம்இல. 224 இல் களுத்துறையிலிருந்து அகலவத்தை வரை பிரதான றோட்டும்; மேற்கில்: அதே காணியின் துண்டு 1 இன் ஒரு பகுதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224இன்படி இருபது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணமுடைய காணியும்அங்கு அமைந்துள்ள மரங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்திகளும் ஆகும்.இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி. 37/260 இல் பதிவு செய்யபட்டது.

மேலே துண்டு 21 மற்றும் 24 என அடையாளமிட்டமேற்குறிப்பிட்ட காணித்துண்டுகள் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்என்.தி. எஸ். வீரக்கொடி தயாரித்த 1985, நவெம்பர் 22 ஆந் திகதியிட்ட மிகவும்அண்மைய அளவை வரைபடம் இல. 1893 இன்படிஒன்றோடு ஒன்று தொடர்புடையதும் ஒரே காணிச்சொத்தாக்கப்பட்டதுமான காணித்துண்டு பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாகொடையில் அமைந்த தடிகொட குருந்துவத்த என அழைக்கப்படும் காணி களுத்துறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. 27587 இல் கோவை செய்திருப்பதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீற்றர் ஜீ டயஸ் தயாரித்த 1950, யூலை 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 158 இல் துண்டு 2 இன் பகுதிகள் அதாவது மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் விபரித்த துண்டுகள் 21 மற்றும்24 என அடையாளமிட்ட காணித்துண்டுகள் : வடக்கில் : துண்டு 20 உம் ; கிழக்கில் : துண்டு 25 உம் ; தெற்கில் : களுத்துறையிலிருந்து மத்துகம வரை பிரதான றோட்டும் ; மேற்கில்: அதே காணியின் துண்டு 2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1893 இன்படி ஒரு றூட் (0ஏ. 1றூ.0பே.) விஸ்தீரணமுடையது. இது களுத்துறை காணிப் பதிவகத்தில் ஜி 152/118 இல் பதிவு செய்யபட்டது.

## இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட நாகொடையில் அமைந்த தடிகொட குருந்துவத்தயின் துண்டு 2 இன் பகுதி என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) துண்டு 25 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் ; வடகிழக்கிலும் கிழக்கிலும் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இல் துண்டுகள் 2, 3, 6 , 7, 8, 12, 13, 16, 1 8, 19, 22 மற்றம் 23 உம் ; தெற்கில் : களுத்துறையிலிருந்து அகலவத்தைக்கு வரை பிரதான றோட்டும் ; மேற்கிலும் வடமேற்கிலும்: அதே காணியின் துண்டு 1 உம் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டுகள் 4, 5, 9, 10, 11, 14, 15, 17, 20, 21 மற்றும 24 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 224 இன்படி ஒரு றூட் எட்டு தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 8.7பே.) விஸ்தீரணமுடையது. இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 37/247 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேட்ட முகாமையாளர் (அறவிடல் கிகைள்).

இலங்கை வங்கி,
அறவிடல் கிளைகள் பிரிவு,
3 ஆம் தளம், தலைமை அலுவலகம்,
4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

5-307

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.